
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விகாரி ஆண்டு ஆடி - ஆவணி ஆகஸ்டு 2019 முரசு 13 ஒலி 146



பிரதி ஒன்றுக்கு ரூ.10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தின் இயற்கை சூழலில்...



# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
– அகவல்

"உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்"



**இம்முகாமில்...**

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

**போன்றவை நடைபெறும்**

செப்டம்பர் 27, 28, 29 2019

நாள்: செப்டம்பர் **27, 28 & 29** வெள்ளி, சனி, ஞாயிறு
(மூன்று நாட்கள் முழுவதும்)

இடம்: **வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
**பொள்ளாச்சி.**

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் செப்டம்பர் **26** வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் **18-60** வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும்
   ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும்.
   குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்துவரவும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: **16, 27, 58** (கடைசி பஸ் இரவு **9:30**க்கு)
உடுமலைபேட்டையிலிருந்து பஸ் எண்: **28, 34** (கடைசி பஸ் இரவு **8:30**க்கு)

**சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி**

**உங்கள் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ. 1,500/-**

**40 நபர்களுக்கு மட்டுமே அனுமதி**

**முன்பதிவிற்கு: 88385 40176, 89403 96760, 73589 04057**



# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

*அன்பு உள்ளங்களே! தங்கள் இல்லத்தில் ஒரு தீபத்தினை ஏற்றி வைத்து அதைப் பார்த்தபடி, அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் நம்மை காப்பார் என்ற முழு நம்பிக்கையுடன் இந்த அருட்பாக்களை ஓதவும். பின்பு ஐந்து நிமிடம் அந்த தீப ஒளியை நம்முள் நினைந்து மகாமந்திரத்தை மனத்தினால் சொல்லி தியானம் செய்யவும். இல்லந்தோறும் இன்பம் பொங்க இந்த ஜோதி வழிபாட்டினை நாள்தோறும் செய்க.*

பொங்குபல சமமெனும் நதிகளெலாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்க நிழல் பரப்பி மயல் சோடையெலாம்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்லக் கடவுளே தேவ தேவே.

தேன்என இனிக்கும் திருவருட் கடலே
தெள்ளிய அமுதமே சிவமே
வான்என நிற்கும் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்
உன்திருக் கோயில் வந்தடைந்தால்
ஏன்எனக் கேளாது இருந்தனை ஐயா
ஈதுநின் திருவருட்கு இயல்போ.

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துஉன் மொய்கழற்கு ஆளாக்காதே
நிந்தைஉறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே.

மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவது காட்டாயோ
கணிக்கறியாப் பெருநிலையில் என்னொடு நீ கலந்தே
கரைகடந்த பெரும்போகம் கண்டிடச் செய்யாயோ
தணிக்கறியாக் காதல் மிகப் பெருகுகின்றது அரசே
தாங்க முடியாது இனிஎன் தனித்தலைமைப் பதியே
திணிக் கலையாதியை எல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியே என் திருநட நாயகனே.

திருச்சிற்றம்பலம்

# உள்ளூற உள்ளுணர்த்தும் பக்தி

**வேத நூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்**
**பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு**
**பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்**
**ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகர் உளானே** என்பது பெரியவாச்சான் பிள்ளை அருளியது.

மாந்தர்க்குரிய நூறு ஆண்டு வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் தூக்கத்தில் கழிந்துவிடுகிறது. மீதமுள்ள நாட்களை பசி, பிணி, மூப்பு, துன்பங்கள் ஆட்கொண்டுவிடுகின்றன. வாழ்வில் விழிக்காமல் தூங்குவது ஒரு பகுதியென்றால் விழித்த வண்ணம் தூங்குவது பெரும்பகுதியாகின்றது. இவ்வாறு விழித்த வண்ணம் தூங்கும் மனிதர்களை எழுப்புவதுதான் இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்.

**“துணையோடு அல்லது நெடுவழி போகேல்”** என்பது முன்னோர் உரைத்த முதுமொழிகளுள் ஒன்று.

நம் வாழ்க்கைப் பயணம் நீண்ட நெடுவழியினை உடையது. குண்டும் குழியும், மேடும் பள்ளமும், சரிவும் சகதியும் நிறைந்த நெடுவழிப் பயணம் அது. இத்தகைய வாழ்க்கைப் பயணத்தில் தொடர்ந்து இடைவிடாது உடன்வரக்கூடிய ஒரு நல்ல துணை நமக்கு கட்டாயத் தேவையாகிறது.

இப்பயணத்தில் நமக்குத் துணையாகப் பற்பல பொருட்கள் வந்து உதுவுகின்றன. செல்வம் ஒரு துணை; கல்வி ஒரு துணை; பெற்றோர் ஒரு துணை; உற்றார் ஒரு துணை; மனைவி ஒரு துணை; மக்கள் ஒரு துணை. இத்தனை துணைகளையும் கொண்டே நாம் நம் வாழ்க்கைப் பயணத்தைக் கடக்க வேண்டியுள்ளது.

ஆனால், இத்துணைகளில் எவையும் இறுதிவரை உதவும் என்று உறுதி கூறுவதற்கில்லை. நமக்கு இறுதிவரை துணைவருவதும், நாம் இளைத்த காலத்தில் வந்து உதவி நம் களைப்பை நீக்குவதும், இப்பிறவிக்கு மட்டுமின்றி எல்லா பிறவிகளிலும் நம்முடன் வந்து உதவுவதுமாகிய ஒப்புயர்வற்ற ஒரு துணை நமக்கு இருப்பதை நம் முன்னோர்கள் தம் கூர்மதியால் கண்டறிந்தனர். அதுதான் இறைவன் மாட்டு நாம் செலுத்தும் பக்தியெனும் ஈடு இணையற்ற வாழ்க்கைத் துணை; பெருந்துணை; அருந்துணை.

**தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**

**மனக்கவலை மாற்றல் அரிது** எனும் வள்ளுவர் வாக்கு இன்றும் நமக்கு உணர்த்துவது இதனையே.

திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பகுதியின் இரண்டாவது குறளாக அமைவது

**கற்றதனால் ஆயபயன் என்கொல்; வாலறிவன்**

**நற்றாள் தொழாஅர் எனின்** என்பது. தூய அறிவு உடையானைத் தொழாது போனால், கற்றதனால் ஆகப்போவது ஒருபயனும் இல்லை எனக் கூறுவதோடு, 'இந்நூலைக்' கற்றதனால் ஆகப்போவது ஒருபயனும் இல்லை என்று பொருள் தருமாறும் இகரச் சுட்டை மறைத்து கடவுளைத் தொழாதோர் உலகியல் கல்வியை கற்றிருந்தாலும், திருக்குறளையே முற்றும் கற்றிருந்தாலும் அதனால் ஆகும் பயன் ஒன்றும் இல்லை என்றே அருளியுள்ளார்.

அன்பு உள்ளங்களே! வாழ்தல் என்பது வேறு; இருத்தல் என்பது வேறு. பிறவியின் பயன் எதுவென உணராமல் திரிபவர்களெல்லாம் இருப்பவர்களாகவே கருதப்படுவர்; அவர்கள் வாழ்பவராக அறிஞர்களால் கருதப்படார். பிறவியின் பயனை, ஐயந்திரிபற உணர்ந்து, அதனை அடைதற்குரிய வழியில் எப்போது அடியெடுத்து வைக்கின்றோமோ அன்று முதலே நாம் வாழத் தொடங்குகின்றோம். **"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே!"** என்ற திருவாசகம், நாம் வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்துகிறது.

**"புளியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே"** என்ற அப்பர் சுவாமிகளின் இவ்வரிகள் வாழ்தல் என்பது என்னவென்று உணர்த்துகின்றது. அதாவது, எப்போது இறைவனை நினைக்கிறோமோ அப்போதுதான் நாம் வாழ்கின்றோம். நினையாத நேரமெல்லாம் நாம் வாழவில்லை; இருக்கின்றோம்.

இவ்விதம் இறைவன்மீது பக்தி நிறைந்த இதயம் உடையவர்களை தாக்கும் துயரங்கள் யாவும் முனை முறிந்து விழுந்துவிடுகின்றன. அவர்களுக்கு, "பாரம் ஈசன் பதம் அல்லால் பற்றில்லை" ஆதலால் பக்தனோடு மோதும் துன்பங்கள் இறைவனோடு மோதுபவை ஆகின்றன. அதனால், இறையடியார்மேல் மோதும் துன்பங்கள் புறமுதுகிட்டுத் தோற்றோட நேர்கின்றது.

**"கற்றுணையால் கடல் கடந்து கரையில் போந்து துளங்கு பெருஞ் சிவ நெறியைச் சார்ந்த ஞானத் துணையே"** என்ற திருவருட்பா வரிகள் நாவுக்கரசர் மேல் மோதிய துன்பங்கள் நலிந்து அழிந்துபோன நிகழ்வினைக் நமக்கு நினைவூட்டுகின்றது.

உண்மை பக்தியினை ஒருவர் மேற்கொண்டு ஒழுகுவாரேயாயின் அவருக்கு வாழ்வின் பயணம் சுகம் தரும் ஒன்றாகுமேயன்றி, தொல்லை தரும் ஒன்றாக அமையாது.

ஆனால், இதற்கு முறையான வழிகாட்டுதல் வேண்டும். நம் திருநாவுக்கரச சுவாமிகள் அருளிய தேவாரப் பாடலை கண்ணுற்றால் இஃது விளங்கும்.

**ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்**
**ஞானத்தால் தொழுவேன் உனை நானல்லேன்**
**ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு**
**ஞானத்தால் உனை நானும் தொழுவேனே**

சில ஞானிகள் நின்னை ஞானத்தால் தொழுவார்கள். ஞானத்தால் உன்னை நான் தொழும் திறம் உடையேன் அல்லேன். ஞானத்தால் தொழுவார்கள் தொழுதலைக் கண்டு ஞானவடிவாகிய பொருளே! உன்னை நானும் தொழுவேனே என்பதே இப்பாடலின் பொருள். திருவருட்செல்வராகிய அப்பர் சுவாமிகளே இவ்வண்ணம் பாடியிருக்கும்போது அற்ப ஜீவர்களாகிய நம் போன்றோர்க்கு பக்திநெறியை உணர்த்தும் ஞான குரு வேண்டுவது அவசியமாகிறதல்லவா. இதனைக் கருத்தில் கொண்டு பின்வரும் ஞானிகளின் அருள்மொழிகளை கண்ணுறலாம்.

இறை பக்தி என்பது இறைவனை பற்றுதல் என்றே பொருள்படும். மனம் ஏதோவொன்றை பற்றியிருக்கவே எண்ணுகின்றது. இருப்பினும் அது பற்றுகின்ற பொருள் பற்றற்றப் பொருளாக இருந்தால் மனம் பயன்பெறும், பரிசில் பெறும் என அருளாளர்கள் பகருவர். நம் வள்ளுவப் பெருந்தகை **“பற்றற்றான் பற்றினையே பற்றுக”** என அறிவுறுத்துகின்றார். இதனை வள்ளல் பெருமானாரும் **“பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டும்”** என்பார்.

இவ்விதம் பற்றற்றவனாகிய இறைவன் திருவடியைப் பற்றுதலையே பக்தியோகமென்று அருளாளர்கள் வகுத்தருளினர். இத்தகைய பக்தியோகத்தில் கணப்பொழுதும் வழுவாமலிருந்து பவக்கடலைக் கடந்து முத்தியடைந்த பக்தப்பெரியோர்கள் எண்ணிலடங்கார். அத்தகையோர் நமக்கு வகுத்துத் தந்த வழிமுறைகளையே இனி காணவிருக்கிறோம்.

ஒரு சமயம் அர்ஜுனனும், கிருஷ்ணரும் பூங்காவொன்றில் உலவிக் கொண்டிருந்தார்கள். அப்போது வானத்தில் ஒரு பறவை பறந்து கொண்டிருந்தது. கிருஷ்ணர் அதைப் பார்த்தார். அதை அர்ஜுனனுக்குக் காட்டினார்.

"அர்ஜூனா, அது புறாதானே?" என்று கேட்டார் கிருஷ்ணர். ''ஆமாம் கிருஷ்ணா, அது புறாதான்'' என்றான் அர்ஜுனன். சில வினாடிகளுக்குப்பின், "பார்த்தா! எனக்கென்னவோ அந்தப் பறவை பருந்தைப்போல் தெரிகிறது" என்றார் கிருஷ்ணர். அடுத்த வினாடியே "ஆமாம்.. ஆமாம்.. அது பருந்துதான்" என்று சொன்னான் அர்ஜூனன்.

மேலும், சில வினாடிகள் கழித்து, "அந்தப் பறவையை உற்றுப் பார்த்தால் அது கிளியாக இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்று கிருஷ்ணர் சொல்ல, கொஞ்சமும் தாமதிக்காமல், "தாங்கள் சொல்வது சரிதான். அது கிளிதான்" என பதிலளித்தான் அர்ஜூனன்.

இன்னும் கொஞ்ச நேரமானதும், "அர்ஜூனா, முதலில் சொன்னது எல்லாம் தவறு. இப்போதுதான் தெளிவாகத் தெரிகிறது. அது ஒரு காகம்'' எனக் கள்ளச்சிரிப்புடன் கூறினார் கிருஷ்ணர். உடனே "நிஜம்தான் கிருஷ்ணா.. அது காகமேதான்.. சந்தேகமே இல்லை'' என பதிலளித்தான் அர்ஜூனன்.

இப்போது கிருஷ்ணர், "என்ன நீ, நான் சொல்வதையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்கிறாயே! உனக்கென்று எதுவும் யோசிக்கத் தெரியாதா?" என கொஞ்சம் கோபம் கொண்டவர்போல் கேட்டார்.

"கிருஷ்ணா, என் கண்ணைவிடவும், அறிவை விடவும் எனக்கு உன்மேல் மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. நீ ஒன்றைச் சொன்னால் அது பருந்தோ, காகமோ, புறாவோ எதுவானாலும் அதை அதுவாகவே மாற்றும் ஆற்றல் உன்னிடம் இருக்கிறது. அதனால் நீ என்ன சொல்கிறாயோ அது அப்படித்தானே இருக்க முடியும். தெய்வத்தின் வாக்கினைவிட வேறு எதன்மேல் நான் நம்பிக்கை வைக்க முடியும்?'' என அமைதியாகச் சொன்னான் அர்ஜூனன்.

இந்த நம்பிக்கையே ஒரு பக்தன் முதலில் மேற்கொள்ளவேண்டிய மிகமுக்கியமான பண்பு. கடவுள்மீது ஒரு குன்றின்மணி அளவுகூட சந்தேகம் இல்லாமல் நம்பிக்கை இருக்க வேண்டும். அவர் நினைத்தால் எப்படிப்பட்ட சூழலையும் மாற்றம் செய்வார் என்பதை உணர வேண்டும். எனவேதான் நம் வள்ளல் பெருமானார், **"நம்மைப் பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங்கோடிப் பங்கு நம்மீது தயவுள்ளவன் நமது ஆண்டவன். ஆகலால், ஒருகாலத்திலும் நமக்குக் குறைவு நேரிடாது இது சத்தியம். ஆனால் நாம் நம்பிக்கைத் தவறாது இருக்க வேண்டும்"** என அருளியுள்ளார்.

அடுத்து, பக்திநெறியில் ஒழுகுவோர் தமது சிந்தனையை எவ்விதம் மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை அறிந்திருத்தல் மிக அவசியம்.

*நம் வள்ளல் பெருமானார் திருவருட்பாவில் 'பொறுக்காப் பத்து' எனும் பதிகத்தில் அருளியுள்ளதாவது,*

பத்திகொண்டவருள் பரவிய ஒளியாம்
பரஞ்சுடர் நின்அடி பணியும்
புத்திகொள்ளலர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
நித்திய அடியர் தம்முடன் கூட்ட
நினைந்திடில் உய்குவன் அரசே
சத்தி செங்கரத்தில் தரித்திடும் அமுதே
தணிகைவாழ் சரவண பவனே

*பத்தியுடைய பெருமக்கள் மனத்தில் பரந்து ஒளிசெய்யும் பரஞ்சுடரான நின் திருவடியைப் பணிந்து ஏத்தும் ஞானம் அற்றவரிடம் போய் ஒன்றை அவரிடம் வேண்டி அடையும் சிறுமைத் துன்பத்தை எளியனான யான் பொறுக்க மாட்டேன். மாறாக, அனுதினமும் நின்னை வழிபடுதல் நீங்காத அடியவர் கூட்டத்தில் என்னைச் சேர்க்கத் திருவுள்ளம் கொள்வாயாயின், அருள் அரசே யான் உவந்து போவேன் என்பதே இதன் பொருள்.*

*எனவே, தெய்வ சிந்தனையை மேம்படுத்திக்கொள்ள விரும்பும் பக்தன், அடியார் திருக்கூட்டத்திலிருப்பது மிகமிக அவசியம். இதனால்தான்,* **"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்"** *எனப் பாடியுள்ளார் நம் பெருமான்.*

*இதற்குமேல் பக்தியோகத்தின் மிக முக்கியமான பகுதியை காணவிருக்கிறோம். அதாவது, பக்தன் பக்திநெறியில் நிலைத்து நிற்பதற்கு ஞானத்தையும், வைராக்கியத்தையும் பெற்றிருக்க வேண்டும்.*

*ஞானம் என்றால் மெய்ப்பொருளை உள்ளது உள்ளபடியே அறிவதாகும். ஞானம் என்பதற்கு "வீடு பயக்கும் உணர்வு" என்கிறார் பரிமேலழகர். இந்த ஞானம் வரவேண்டுமானால் அதற்கு எது உண்மை? எது பொய்? என்கிற நித்திய அநித்திய விசாரணை வேண்டும். இத்தகை விசாரணையினால்தான் வைராக்கியத்தோடு பக்திநெறியில் தொடர்ந்தும், ஆழ்ந்தும் செல்லமுடியும். இங்கு வைராக்கியம் என்பது எல்லாவற்றையும் துச்சமாக மதித்து விட்டுவிடுவது என்பதாம்.*

*இந்த நித்திய அநித்திய விசாரணையில் மகான்கள் பலவேறு கருத்துக்களைக் கூறியிருப்பினும் இதில் ஒன்றை மட்டும் காணலாம்.*

மனித தேகத்தை மகான்கள் நிலையற்றது என இயம்புவது வழக்கம். நம் வள்ளல் பெருமானாரும் இக்கருத்தையே பின்வருமாறு இயம்புகின்றார்கள்.

"உப்பு வைக்கப்பட்ட மண் பாத்திரத்தைப் போல் வெளியே நீரும் சீழும் விளங்குவது இந்தவுடல். இதனை உயர்வான வானத்தில் எறிந்த கல் என்றும், மலையினின்று விழுகின்ற அருவி என்றும், கொடியதாய் வீசும் காற்றில் ஏற்றி வைத்த விளக்கைப் போன்றது என்றும், மழை மேகத்தில் தோன்றும் மின்னல் போன்றது என்றும், வீசும் காற்றில் அகப்பட்ட பஞ்சு போன்றது என்றும், மேகம் போன்றது என்றும், வினையால் வடிவு கொண்டு வந்த வெற்றுப் பொய் வேடமென்றும், மரக்கிளையில் கட்டப்பட்ட பறவைக் கூடென்றும், பொய்க்கனவு போன்றது என்றும், நீரில் எழுதப்படும் எழுத்தைப் போன்றது என்று அதன் நிலையாமையை அறிந்தும் அதன் மீது ஆசை நீங்கப் பெறாது ஒழுகுகின்றேனே என் செய்வேன்" என்கின்றார்.

இவ்விதம் கூறியிருப்பினும், **இம்மனித தேகத்தையே பெறுதற்கரிய தேகமாகவும்** போற்றுகின்றனர். ஏனென்றால், இத்தேகமே உத்தமனாம் இறைவன் கோயில்கொண்டுள்ள இடம் என்கிறார் சித்தர் திருமூலர்.

நம் வள்ளல் பெருமானாரும், இம்மனித தேகத்தின் ஒவ்வொரு அங்கமும் இறை அனுபவம் பெறுதற்கே படைக்கப்பட்டுள்ளது என்கிறார். திருஅருட்பாவில் அருளப்பெற்ற இரு பாக்களை வைத்து இதைக் காணலாம்.

இறைவனை துதிபாடாதவர் பேயராவார். அத்தகைய பேயர் வாய் பிறரிடம் சென்று எப்போதும் கூழுக்காக ஏங்கி நிற்கும் வெற்று வாயாகும்.

இறைவனை வணங்காதோர் மூடர். அவர்தம் தலை பிணம் எரிக்கப்பயன்படும் விறகினைச் சுமக்கின்ற தலையாகும்.

கடவுளது திருமேனியைக் காணாதவர் கீழானவர். அவர்தம் கண்கள் எப்போதும் துன்பத்தில் நீரைச் சொரிந்து அழுகின்ற கண்களாகும்.

இறைவனது புகழைக் கேளாத காதுகளை உடையோர் வீணர். அந்தச் செவியில் எப்போதும் கீழ்மையான சாவுச் செய்திகளே கேட்கும்.

பிறவிப்பிணி அற அருளுகின்றபடியான இறைவா உன்னை நினையாத மனத்தினை உடையோர் பாவிகள். அந்த நெஞ்சம் அச்சத்தால் நடுங்கும் தன்மை கொண்டது.

மேலானவனான உன்னைக் கண்டு கூப்பாத கைகளை உடையோர் வஞ்சகர். அவர்தம் கைகள் எப்போதும் பிறரிடம் பிச்சையேற்க நீண்டு வளையும் கைகளாகும் என இறைவனை வணங்காதோரின் அங்க அவயங்களை இழிவானதாகக் கூறி அவர்களைக் கடுமையாகச் சாடுகின்றார்.

இதற்கு மாறாக, இறைவனை துதித்து வணங்குவோரின் அங்க அவயங்களை எங்ஙனம் புகழ்ந்துரைக்கிறார் என்பதை காண்போம்.

இறைவனின் புகழைப் பேசுவோரே செல்வர்கள். அவர்தம் வாய் திருவாய். ஏனெனில் இறைவனின் திருநாமமாகிய அமுதத்தை அனுதினமும் உண்பதால்.

தனித்தலைமை இறைவனின் திருவடிகளை வணங்கிய தலை மணிமுடி அணிந்து சிறப்புற்று வாழும் தலையாகும்.

மெய்யனாகிய இறைவனின் திருமேனியைக் கண்டோர் புண்ணியர்கள். அவர்தம் கண்கள் மிக்க ஒளியுடைய கண்களாகும்.

கடவுளின் திருப்புகழைக் கேட்ட வித்தகரின் அழகிய காதுகள் மேன்மையான செய்திகளையே கேட்கும் செவிகளாகும்.

இறைவனை நினைப்போரே மேலோர்கள். அவர்தம் மனம் மெய்யின்பத்தில் மூழ்கித் திளைக்கும்.

இறைவனைக் கண்டு கூப்புகின்ற கைகளை உடையோரே சான்றோர்கள். அத்தகைய கைகள் பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொடுக்கும் கைகளாகும்.

இவ்விதம் பக்தி நெறியில் நிற்போரின் பெருமையையும், சிறப்பினையும் எடுத்துரைக்கும் நம் பெருமானார், அந்நெறி நில்லாதோரை இகழ்ந்துரைப்பதையும் கண்டோம். இனி பக்திநெறியில் தவழ்வோரின் குணாதிசயம் எப்படி இருக்க வேண்டுமெனக் காண்போம்.

பக்திநெறியில் உள்ளோர் பொய்விட்டு மெய்நெறியைப் போற்ற வேண்டும். யான் எனது என்கிற தற்போதத்தை கைவிட்டவராய் இருத்தல் அவசியம். பக்தி உணர்வைக் கடைபிடித்து, செருக்கறுத்து, உடல் முழுதும் கண்ணீர் அருவி வழிந்தோட, எலும்புருக, உள்ளுருக, உயிர் உருக, அன்புருக, அன்புருவமாகிப் பின் தீமையெலாம் அகன்று இறைவனைப் போற்ற வேண்டும். இக்குணம் கொண்ட பக்தனின் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு இறைவன் குடிகொள்கிறான் என்கிறார் வள்ளல் பெருமானார்.

இத்தனை குணங்களையும், ஒழுக்கங்களையும் பின்பற்றி நாம் ஏன் பக்தி செலுத்த வேண்டும்? இவ்விதம் சிரமப்பட்டு பக்தி

செய்வதால் விளையும் பயன்தான் என்ன? இதுபோன்ற வினாக்கள் நம் உள்ளத்தில் எழுவது நியாயம்தான். அதற்கான விளக்கங்களையே இனி நாம் காண உள்ளோம்.

பொதுவாக, நாம் ஒரு செயலைச் செய்ய விழைவதற்கான காரணம் இரண்டுதான். ஒன்று இன்பமாக இருப்பதற்கு அல்லது துன்பம் நீங்குவதற்கேயாம். இதை வெளியில் உள்ள நிலையற்ற பொருட்களால் நமக்குக் கொடுக்க முடியாது. ஒரே நிலையாய், ஒரே இயல்பாய், என்றும் இருக்கக் கூடிய ஒரு சத்தியப் பொருளால் மட்டுமே கொடுக்க முடியும். இப்பிரபஞ்சத்தில் இத்தகைய தன்மை கொண்ட ஒரே பொருள் இறைவன் மட்டுமே. இந்த ஒரு பொருளை அடைவதற்கான சாதனமே பக்தி. இப்பக்தியின் பயனாய் எல்லாத் துன்பங்களும் நீங்கி எல்லையிலா இன்பம் விளையும். இதைத்தான் நம் மகான்கள் "முக்தி" என்ற ஒரு சொல்லால் குறிப்பிடுகின்றனர். இதன் காரணமாகத்தான் நம் வள்ளல் பெருமானார் "இம்மனித தேகம் முத்தியின்பம் பெறுவதற்கே எடுத்த தேகமாகும்" என்று உரைநடைப் பகுதியில் அருளியுள்ளார்கள்.

இம்முக்தி அடைய அடிப்படையாய் இருப்பது பக்தி சாதனமே. இதை திருவருட்பாவில் **'முத்தி உபாயம்'** எனும் பதிகத்தில்

முத்தி வேண்டுமேல் பத்தி வேண்டுமாம்; சத்தியம் இது புத்தி நெஞ்சமே

என அருளியுள்ளார். முக்தி எனும் கோட்டையின் நுழைவு வாயில் பக்தி. இதுவே மேற்கண்ட அருட்பாவின் கருத்தாம்.

எத்தனையோ மார்க்கங்கள் இருக்க பக்திநெறியை இங்கு மேன்மைப்படுத்தி சொல்லக் காரணம் பக்தி வலையில் இறைவன் எளிதாக அகப்பட்டுக் கொள்வான். "பத்தி வலைப் படுகின்ற தெய்வம்; பத்தி செய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்" என்ற திருஅருட்பா வரிகளே இதற்குச் அகச்சான்று.

இவ்விதம் நம் பெருமானார் இறைவனிடம் தான் கொண்ட பக்தியின் பயனாக கடவுள் ஒருவரே என்பதை உணர்ந்து மெய்ஞ்ஞான நிலையடைந்து, மெய்ச்சித்தியெலாம் பெற்றதாக அருளியுள்ளார்.

ஆகவே, நாமும் நம் மகான்கள் அருளியுள்ளதைப் போல் பொய்யினை விட்டு, மெய்ந்நெறியைப் போற்றி, யான் எனதை விடுத்து பக்தி உணர்வில் நின்று நிகரில்லா இன்பமாம் முக்தியை அடைந்து வாழ்வோமாக!

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர் சொல் அமிர்தம்

*ஓர் ஊரை அடுத்திருந்த காட்டில் எளிமையான குடிலில் துறவி ஒருவர் தங்கி இருந்தார். அந்தக் குடிலில் பளபளக்கும் பித்தளைச் செம்பு ஒன்று இருந்தது.*

*அவரை வழிபட வாரம் தவறாமல் உழவன் ஒருவன் வந்தான். எப்பொழுதும் இறைவனை வழிபட்டபடியே அவர் இருப்பதைப் பார்த்தான் ஆர்வத்தை அடக்க முடியாத அவன், "துறவியாரே! எனக்கு ஓர் ஐயம்" என்றான்.*

*கண் விழித்த அவர் "என்ன?" என்று கேட்டார்.*

*"துறவியாரே! கடவுள் எல்லாம் அறிந்தவர். எல்லாம் உணர்ந்தவர். அவரை நாம் ஒரு நாளைக்கு ஒருமுறை வழிபட்டால் போதாதா? அதை அவர் நினைவில் வைத்துக் கொள்ள மாட்டாரா? நீங்கள் ஏன் எப்பொழுதும் கடவுளை வழிபட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.*

*அவர் பதில் ஏதும் பேசவில்லை. அமைதியாக இருந்தார்.*

*வழக்கம் போல அடுத்த வாரம் அங்கு வந்தான்.*

*பளபளப்பாக இருந்த பித்தளைச் செம்பு களிம்பு ஏறி பழுப்பு நிறத்துடன் காட்சி அளித்தது.*

*"துறவியாரே! ஏன் இந்தச் செம்பு இவ்வளவு அழுக்குப் படிந்து மங்கிக் காட்சி அளிக்கிறது?" என்று கேட்டான்.*

*"அன்பனே! ஒரு வாரமாக இந்தச் செம்பை நான் துலக்கவில்லை. இதன் நிலையைப் பார்த்தாயா?*

*பார்ப்பதற்கு அருவருப்பாக உள்ளது.*

*இறைவன் நம்மை நினைவில் வைத்துக் கொள்வதற்காக நாம் அவரை வழிபடவில்லை. நம் மனம் நல்ல சிந்தனையுடன் இருப்பதற்காகவே வழிபடுகிறோம். பாத்திரத்தைத் துலக்குவதைப் போல" என்றார் அவர்.*

கண்ணே கண்மணியே கருத்தே கருத்தின் கனிவே
விண்ணே விண்ணிறைவே சிவமே தனி மெய்ப்பொருளே
தண்ணேர் ஒண்மதியே எனைத் தந்த தயாநிதியே
உண்ணேர் உள்ளொளியே எனக்கு உண்மை உரைத்தருளே

– திருஅருட்பா

..திருச்சிற்றம்பலம்..

# கோயில் நகரம்



இவ்வுடலை ஒரு நகரத்திற்கு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. திருமூலநாதர் இவ்வுடம்பினை பெரிய கோயில் என்கிறார். சாந்தோக்ய உபநிடதம் உடம்பை வெறும் நகரம் என்று சொல்லாமல் இறைவன் வாழும் நகரம் என்று கூறி சிறப்பிக்கிறது. அஃதாவது கோயில்நகரம்தான் இவ்வுடம்பு. கோயில் நகரம் என்றதும் நம்கண்முன் நிற்பவை கும்பகோணமும், காஞ்சிபுரமும்தான். எண்ணற்ற கோயில்கள், வழிபாட்டுமுறைகள், கடவுளர்கள், எஞ்சி நிற்பது ஏற்றமா? ஏமாற்றமா?

**ஆரூரர் இங்கு இருக்க அவ்வூர்த் திருநாள் என்று**
**ஊர் ஊர்கள் தோறும் உழலுவீர் – நேரே**
**உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்**
**விளக்கு இருக்கத் தீத்தேடுவீர்.**

என்றும் பட்டினத்து சுவாமிகள் கூறுகின்ற மறைவாசகமும் மேற்கூறுகின்ற உண்மையைத்தான் மறைக்காமல் உரைக்கின்றன. இதன் மூலம் நாம் பெற வேண்டிய மெய்யறிவு யாதெனில், ஊர்கள் தோறும் சுற்றித்திரிந்து கோயில்கள் தோறும் வழிபாடு செய்தாலும், அப்பரம் பொருளை நெருங்க முடியாது; அடைய முடியாது; அதனுள் ஒடுங்க முடியாது என்பதே தீர்க்கமான முடிவாகும்.

நகரத்தில் எத்தனை செயல்பாடுகள் நடைபெறுகின்றனவோ, அத்தனையும் இவ்வுடல் என்னும் நகரிலும் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளால் தலைநகரம் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அகலவழிப் பாதைகள் பத்து, இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புவி, சங்குனி, குரு எனப்படுபவை. வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றும் சமமாக அது அதன் நிலையில் ஓடவேண்டும். மாறாக ஒன்றை ஒன்று மிஞ்சி ஓடினால் உடல்நலம் பாதிக்கப்படும். முற்கால வைத்தியர்கள், நாடியைப் பிடித்துப் பார்த்து எது விஞ்சி நிற்கிறதோ அதனை சமன் செய்யவே மருத்துவம் செய்வர். வாதம் பித்தம் சிலேத்துமம் ஆகிய நாடிகள் ஒன்றை ஒன்று முரணுமேல் நாம் நம் ஆயுள் குறித்து ஐயுற வேண்டும். இதனை ஔவையார் குறும்பாக ஒரு பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**வாதக்கோன் நாளை என்றான் வையக்கோன் பின்னை என்றான்**
**ஏதக்கோன் யாதேனும் இல்லை என்றான் – ஓதக்கேள்**
**வாதக்கோன் சொன்னதிலும் வையக்கோன் சொன்னதிலும்**
**ஏதக்கோன் சொல்லே இனிது.**

வாதக்கோன் என்பது வாதநாடி, வையக்கோன் என்பது பித்தநாடி, ஏதக்கோன் என்பது சிலேத்தும நாடி. பாழும் நோய்களால் இந்நாடிகள் படபடக்கும். ஏதாவது நமக்கு படபடப்பு வருகிறதா?

வாதம், பித்தம், சிலேத்துமம் இம்மூன்றும் ஒன்றையொன்று விஞ்சாமல் சமனாக இருக்கவேண்டுமானால் அதிகாலை சூரிய உதயாதி நாழிகையில் எழுந்து விழிப்புடன் இருக்க அறிவுரை வழங்குகிறார் நமது வள்ளல் பெருமானார். பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படும் அதிகாலை மூன்றே முக்கால் மணியிலிருந்து ஐந்து முப்பது மணிவரையில் மேலிருந்து அமுதக்காற்று எனப்படும் சுத்தமான பிராணவாயுவாகிய அமிர்தகாற்று வீசுவதால் அவ்வேளையில் தியானம் செய்தால் வாதம், பித்தம், சிலேத்தும நாடிகள் சமனாகிறது. அவற்றுள்ளும் அதிமுக்கியமான இடகலை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் மூன்று. இதுவன்றி உயிருடன் உடல் இயங்குவதற்கான பத்து வாயுக்கள். பிராணன் என்ற வாயு உடலின் மேல் நோக்கிய இயக்கத்தையும். அபானன் கீழ் நோக்கிய இயக்கத்தையும், வியானன் எல்லாபக்க இயக்கத்தையும், உதானன் இறுதிக் கட்ட உயிர் வெளியேற்றத்தையும், சமானன், உணவு செரித்தல், இரத்தமாக மாற்றுதலையும், நாகன் வாந்தி ஏப்பத்தையும், கூர்மன் கண்இமைகளின் இயக்கத்தையும், கிருகலன் பசியையும், தேவதத்தன் கொட்டாவி, தனஞ்செயன் கருவுறுதலோடு உடம்பின் ஆரோக்கியத்தையும் கண்காணித்து காவல் துறையாகவும் செயல்படுகின்றன. அனைத்து செயல்பாடுகளையும் படம்பிடித்து சித்தமாகிய அந்தக் கரணத்தில் பதிவு செய்யும் இரகசியப்படப்பிடிப்புக் கருவியும் இவ்வுடம்பில் பொருத்தப்பட்டுள்ளது. இப்பத்து வாயுக்களின் கூட்டு என்பதே பிராணன் என்னும் தலைமைக்காவல் கண்காணிப்பாளர். எங்கெங்கு காணினும் சத்தியடா என்பது பிராணனே.

மண்ணின் தோற்றம் நாற்றம், நீரின் தன்மை சுவை, தீயின் தேர்வு ஒளி, காற்றின் பகுதி ஊறு, விண்ணின் கூறு ஓசை, இவ்வைந்தும் ஐம்பூதங்கள் எனப்பெறும் ஐந்து மூலங்களின் அங்கங்களாகி, ஐம்புலன்கள் எனப்பெற்று ஐம்பொறிகளின் வழியாக இயங்கி வருகின்றன.

**நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்**

என்பது தொல்காப்பியம். பொறிபுலன் வழிகளில் வெறியராகி சிற்றின்பம் துய்த்து ஆன்மாக்கள் வீழ்ச்சி அடையாமல், அப்புலன்வழி மெய் இன்பம் துய்த்தலாகிய இறைநலம் புரிந்து உய்வடைய வேண்டும். ஆகாயத்தின் அம்சமாக காது ஓசையையும், காற்றின் அம்சமாக மெய் பரிசமெனும் தொடு உணர்வையும், தீயின் அம்சமாக கண்கள் ஒளியையும் நீரின் அம்சமாக நாக்கு சுவையையும், நிலத்தின் அம்சமாக நாசி மணத்தையும் முகர்ந்து அறியும் செயலையும் செய்துவருகின்றன.

மேலும் இவற்றின் செயல்பாடுகளை பிருதிவி (நிலம்) குரு– நாசியிடமாக வாசனை அறிதலும், அப்பு (நீர்) சுக்கிரர் – நாவிடம் சுவையிதலும், தேயு அங்காரர் – நேத்திரமிடம் வடிவமறிதலும், வாயு புதன் – சரீரத்தில் பரிசமறிதலும், ஆகாயம் சனி – செவியிடம் சத்தமறிதலும், இராகு, கேது சாயைஎன்றும், அவை குதம் குய்யம் இருப்பிடமாகக் கொண்டு இருப்பனவென்றும் இவ்வாறு நவக்கிரகங்கள் வேலை செய்து வருகின்றன என்பதை வேதங்கள் சொல்கின்றன. தூல தேகம் சக்தி, சந்திரராம், உயிர்ப்பாகிய உயிர் சூரியர் சிவமாம்; இவ்வாறு வேதங்கள் சொல்ல, திருமூலநாதரின் திருமந்திரம் எவ்வாறு ஓதுகிறது? இவ்வுடலை நடமாடுங் கோயில் என்கிறது.

**கோயில் கொண்ட அன்றே குடிகொண்ட ஐவரும்**
**வாயில் கொண்டு ஆங்கே வழிநின்று அருளுவர்**
**தாயில் கொண்டாற்போல் தலைவன் என்னுள் புக**
**வாயில் கொண்டு ஈசனும் ஆளவந்தானே**

இவ்வுடலில் தாய்வீடாக சிவம் வீற்றிருக்கையால், பஞ்சபூதத்தின் அமைப்பான இவ்வுடலுக்குள் பஞ்சபூதத் தலைவர்களும் அவரவர் தொழிற்படும் வாயிலில் நின்று உயிருக்கு வேண்டிய அறிவை அளித்தருளுகின்றனர். இவ்வுடல் உண்டான போதே இப்பணிகளை அவரவர் செய்யத் தொடங்கினர்.

**நான்முகன் – மண் – மூக்கு – மணம் அறியவும்,**
**திருமால் – நீர் – நாக்கு – சுவை அறியவும்,**
**உருத்திரன் – தீ – கண் – ஒளி அறியவும்,**
**மகேசுரன் – காற்று – தோல் – ஊறு (பரிசம்) அறியவும்,**
**சதாசிவன் – ஆகாயம் – செவி – ஓசை அறியவும்,**

இவ்வுடலாகிய புனித நகரத்தை நடமாடுங்கோயிலை, நாடி நரம்புகள் தொடங்கி, தசவாயுக்கள், கோள்கள், பஞ்சபூதங்கள் என எத்தனை எத்தனை ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டு அருளாட்சி நடத்தப்படுகிறது என்பதை மேற்கூறியவற்றிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. நாள்களின் ஓட்டம்; நம்மீது எப்போதும் கோள்களின் நாட்டம்; ஆகவே நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலும் உறவினர்க்கும், நண்பருக்கும் மற்று உலகியலார்க்கும் வேண்டுமானால் தெரியாமல் போகலாம் அல்லது மறைத்து வைக்கலாம். ஆனால் ஐந்தொழில் செய்யும் தேவர்க்கு தெரியாமல், நவக்கிரகம் என்னும் கோள்களுக்குத் தெரியாமல் எச்செயலும் நடவாது. ஒவ்வொரு தீயசெயலும், சொல்லும் அவ்வப்போதே நமது சித்தம் என்ற அந்தக்கரணத்தில் ஒலிப்பதிவோடு ஒளிப்பதிவும் செய்யப்படுகின்றன. ஏமாற்றலாம் என்று நினைக்கலாம். ஆனால் ஏமாற்றவே முடியாது. காய்த்த மரம் கல்லடிப் பட்டே தீரும். ஒளியும் ஒலியும் நீ ஒளித்து மறைத்து வைத்திருப்பதை வெளியில் கொண்டுவந்து தண்டித்தே தீரும்.

இவ்வுடலின் ஒவ்வொரு இயக்கத்தையும் சற்று உள்நோக்கி ஆய்ந்து பார்த்தால், அற்புதமாக அதிசயமாக நடைபெறுகின்றன என்பதை உணரமுடியும். இத்தனை செயல்பாடுகளையும் நாம் அறிய முடியாமலேயே எத்துணைப் பேராற்றல் மிக்கவர்கள் அவரவர் தத்தமக்குரிய செயல்களை, பணிகளை இவ்வுடலுக்குள் நின்று நிலைபெறச் செய்துவருகின்றனர். சமுதாய வாழ்க்கை, கல்வி, கோயில், போக்கு வரத்து, நதிகள், உணவு உற்பத்தி, சுத்திகரிப்பு, கழிவை வெளியேற்றுதல், காவல் என ஒன்று விடாமல் எல்லாத் துறைகளும் இவ்வுடலினுள் உள்ளன.

மேற்கூறிய செயல்கள் அனைத்தும் ஒரு நகரத்தில் தவறாமல் நடப்பதைப் போலவே, கோயில் நகரமாகிய, நடமாடுங்கோயிலாகிய, பிரம்மபுரமாகிய இறைவன் வாழும் நகரமாகிய, ஆன்மா வாழும் இவ்வுடலிலும் நடைபெறுகின்றன என்று நம் முனிவர்கள் அக்காலத்திலேயே அருளியுள்ளனர்.

நமது முனிவர்கள் அறிவியலின் துணை இல்லாமலேயே இதனை உணர்ந்து அறிந்து உள்ளதை உள்ளவாறே கூறி இருப்பது வியக்கத்தக்கதே. உலகில் இறைவன் அருளாட்சி நடத்தி இயக்குவதைப் போலவே ஆன்மாவின் உள்ளிருந்தும் எல்லா தத்துவங்களையும் இயக்குவிக்கிறது, பேசவைக்கிறது, நடக்க வைக்கிறது, ஓடவைக்கிறது, உழைக்க வைக்கிறது, உண்ண வைக்கிறது, உறங்க வைக்கிறது, நல்வினை தீவினைகளை சித்தம்

என்னும் அந்தக்கரணத்தில் பதிய வைக்கிறது, உடலின் செயல்பாடுகள் நியதிக்குக் கட்டுப்படாத நிலையிலும்சரி அதே சமயம் முன் வினைகளின் விதிப்படி கட்டுப்பட்டும்சரி எந்த நேரத்தில், எந்த வயதில், எந்த வினையின் விளைவால், இன்ன செயலின் முடிவால் அதுவும் எதனால் நிகழ்த்தப்பட வேண்டுமோ அதனால் அணுவளவும் பிசகாமல் நிகழ்ந்து அக்கணப் பொழுதில் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தும் செல்லுமாறு அருளரச நடத்துகிறார்.

சாதாரணமாக ஒரு சமுதாய மாற்றத்திற்குக் கூட தனி மனித ஒழுக்கம் மிக முக்கியம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அதுபோல் கோயில் நகரமாகிய இந்த தேகத்தில் அனேக செயல்பாடுகள் தன்னிச்சையாக நடந்தபோதிலும் ஒவ்வொரு ஜீவனின் கடமை என்ன?

கிடையாத பொருளிடத்து ஆசையும், ஆசைதடைபட்ட இடத்துக் கோபமும், ஆசைப்பட்ட பொருளுக்கு உரிமையாளர் அறிந்தால் என்செய்வாரோ என்ற அச்சமும், அச்சங் காரணமாக எழும் துக்கமும், பெருமை உடையாரது செல்வத்தைக் கண்டு பொறாமையும் கூடாது. ஈண்டு செல்வம் என்பது சிவந்திகழ் ஞானமும் அதனால் பெறுகின்ற பேறுமேயன்றி பொருளுடைமையாகா. ஏனெனில் பொருட் செல்வம் பூரியார் கண்ணும் (இழிந்தவரிடத்தும்) உளது என்கிறது திருக்குறள். மேலும் பிறர் குற்றங்களை மட்டும் பேசி, எவ்வாற்றானும் தன்னை உயர்த்திக் கொள்ளவே முடியாது. ஞானம் என்பது ஊனம் சிறிதும் இல்லா ஒழுக்க நெறி. பிறருக்குக் கேடு உண்டாகும்படி பேசுதலும், தன் தகுதிக்கும், செய்கைக்கும், எண்ணத்திற்கும் பொருந்தாத புகழினை விரும்புதலாகிய சிறுமையும் ஆகிய இவை உடைமை ஞான ஒழக்கத்திற்கு தவறுதலாகும்.

செய்கைக்கும், எண்ணத்திற்கும் பொருந்தாத புகழினை விரும்புதலாகிய சிறுமையும் ஆகிய இவை உடைமை ஞான ஒழக்கத்திற்கு தவறுதலாகும்.

இவ்வாறு தேவிகாலோத்தரம் என்ற நூல் நன்னெறிகளைப் பிடித்து ஒழுக உத்தரம் அளிக்கிறது. எனவே, ஞானியைப் பூசித்தவர் சிவ புண்ணியத்தையும், மாறாக தூசித்தவர் கொடிய பாவத்தையும் அடைவர் என்பதும் உத்தரம். அதோடு மெய்ஞானியர்க்கு சிறிதளவாய் நன்மை செய்திட்டாலும் அது

மலை அளவாய் செய்தவர்க்குப் பயன்கொடுக்கும். ‘பசி வந்திடப் பத்தும் பறந்து போம்’ என்பதாலும், அழிபசி அஃதாவது உயிரை அழிக்கும் பசி என்ற தெய்வப்புலவன் ஐயன் திருவள்ளுவன் திருவாக்காலும், பசியானது தவத்தையும் அழிக்கும் என்ற காரணத்தாலும் தவசியர்க்குப் பசி நீங்கும் பொருட்டு அன்னத்தை உண்பித்தவன், தவமுடையார் தவப்பலத்தின் பாதியைப் பெற்றுவிடுகிறான் என்பதோடு, ஞானியின் பசியை நீக்குதலால் ஞானத்தையும் அடைகிறான் என்பதும் பொருந்தும். தேவிகாலோத்திரம் இதனை இவ்வாறு உரைக்கிறது.

**சொன்ன ஞானி தனைத்துதி செய்தவர்**
**முன்னஞ் செய்யறம் முற்றும் அடைகுவர்**
**இன்னல் சொன்னவர் எய்துவர் வன்பவம்**
**அன்னம் ஈபவர் அசைவின்ஞா னஞ்சேர்வார்.**

இதனையே நம் வள்ளல் பெருமானார் தருநெறி எல்லாம் உள் வாங்கும் சுத்த சமரச சன்மார்க்கம் என்றே தனிப்பெயர் கொண்டு ஓங்கும் திருநெறியில் பசி என்பது எல்லா உயிர்க்கும் பொதுவான பெரும்பிணி என்றுணர்ந்து ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடென வகுத்தருளினார்.

மேலும் சத்விசாரமும், பரோபகாரமுமே சன்மார்க்கத்தின் சாதனம் என்றுரைத்தார்கள். இவ்விரண்டையும் மேற்கொள்ளும் சாதகன் திருவருளால் மனிதப் பிறப்பின் நோக்கமாகிய வீடுபேற்றினை அடைவதென்பது திண்ணம் என்றும் அருளியுள்ளார்.

..திருச்சிற்றம்பலம்..

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

# அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை

**அகப்பூ அகவுறுப்பு ஆக்க அதற்க அவை**
**அகத்தே வகுத்த அருட்பெருஞ்ஜோதி**

*அண்டத்தில் அகம் அக்கினி; பிண்டத்தில் அகம் ஆன்மா.*

*பூ என்பதற்கும் உறுப்பு என்பதற்கும் இரத்தினசபாபதியார் மிகச்சுருக்கமாகக் கூறும் விளக்கம் அழகியது.*

**“பொலிவதும் பொலிவுறச் செய்வதும் பூ**

**உற்றுப் பொலிவது உறுபூ; உறுப்பு”**

*அண்டத்தில் அகப்பூ அக்கினி. அதனை ஏற்றுப் பிண்டத்தில் பொலிவது ஆன்மா. அகத்தே ஆக்கப் பொலிவை வகுத்த அருட்பேரொளி என்பதே இதன் பொருள்.*

| | | |
|---|---|---|
| *அகப்பூ* | - | *அண்டத்தில் அகப்பூவாகிய அக்கினியைக் கொண்டு* |
| *அக உறுப்பு* | - | *பிண்டத்தில் அகஉறுப்பாகிய ஆன்மசக்தியை* |
| *ஆக்க* | - | *ஆக்கியருளிய* |
| *அதற்கவை* | - | *அவற்றை* |
| *அகத்தே வகுத்த* | - | *அகப்பூவாகவும் அக உறுப்பாகவும் வகுத்த* |
| *அருட்பெருஞ்ஜோதி* | - | *அருட்பெருஞ்ஜோதி* |

**புறப்பூ புறத்தில் புனைஉரு ஆக்கிட**
**அறத்துடன் வகுத்த அருட்பெருஞ்ஜோதி**

*அண்டத்தில் புறம் சந்திரன்; பிண்டத்தில் புறம் மனம் முதலிய கரணங்கள். அவை சந்திரனின் அம்சமாகவே அமைந்தவை. அஃதாவது, அண்டத்தில் புறமாகிய சந்திர ஒளியை ஏற்றுப் பிண்டத்தில் பொலிவது மனமாம்.*

| | | |
|---|---|---|
| *புறப்பூ* | - | *அண்டத்தில் புறப்பூவாகிய சந்திரனின் அம்சத்தால்* |
| *புறத்தில் புனைஉரு ஆக்கிட* | - | *பிண்டத்தில் புற உறுப்பாகிய மனம் முதலிய கருவிகளை புனைந்து உருவாக்கிட* |
| *அறத்துடன் வகுத்த* | - | *இயற்கை அறத்தோடு வகுத்தருளிய* |
| *அருட்பெருஞ்ஜோதி* | - | *அருட்பெருஞ்ஜோதி* |

**அகப்புறப்பூ அகப்புறஉறுப்பு இயற்றிட**
**அகத்துஇடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி**

| | | |
|---|---|---|
| அகப்புறப்பூ | - | அண்டத்தில் அகப்புறப்பூவாகிய சூரியனின் அம்சத்தால் |
| அகப்புற உறுப்பு இயற்றிட | - | பிண்டத்தில் அகப்புற உறுப்பாகிய ஜீவனை உண்டாக்கி |
| அகத்திடை வகுத்த | - | பிண்டத்தின் அகத்தே வகுத்தருளிய |
| அருட்பெருஞ்ஜோதி | - | அருட்பெருஞ்ஜோதி |

அண்டத்தில் அகப்புறமாய் விளங்கும் சூரியனின் அம்சத்தால் பிண்டத்தில் அகப்புறமாக ஜீவனை வகுத்தருளியது அருட்பெருஞ்ஜோதி. ஜீவன் சூரியன் அம்சம் என்பது கருத்து.

**புறப்புறப் பூ அதில் புறப்புற உறுப்புஉற**
**அறத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி**

| | | |
|---|---|---|
| புறப்புறப்பூ | - | அண்டத்தில் புறப்புறப் பூவாகிய நட்சத்திரங்களின் அம்சங்களால் |
| புறப்புற உறுப்புஉற | - | பிண்டத்தில் புறப்புற உறுப்புகளான இந்திரியங்கள் அமைய |
| அறத்திடை வகுத்த | - | இயற்கை அறத்தால் வகுத்தருளிய |
| அருட்பெருஞ்ஜோதி | - | அருட்பெருஞ்ஜோதி |

அண்டத்தில் புறப்புறம் நட்சத்திரங்கள்; பிண்டத்தில் புறப்புறம் இந்திரியங்கள். இந்திரியங்கள் நட்சத்திரங்களின் அம்சமாகவே அமைந்தவை.

அண்ட ஒளி நான்கு, பிண்ட ஒளி நான்கு என்ற உபதேசத்தில் வள்ளல் பெருமான் இவற்றைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

அண்ட பிண்ட சமம் என்பது ஆன்றோர் அனுபவ மொழி. அண்டத்தையும் பிண்டத்தையும், அண்டப் பொருட்களையும் பிண்டப் பொருட்களையும் பல்வேறு வகைகளில் சமப்படுத்திக் காண்கிறார் வள்ளல் பெருமான். அவ்வளவும் தத்துவங்கள், இயற்கை உண்மைகள்.

..திருச்சிற்றம்பலம்..

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

## Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 | VALASARAVAKKAM 42105700 | PORUR 42107304 | OMR 42863478 | VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அறநூல்கள் அருந்தவ நூல்கள்

வாழ்க்கைக்கு உதவும் பொருள்கள் பலவகைப்படும். இருந்தே ஆகவேண்டுமெனச் (essential) சில உள்ளன. உணவு, தண்ணீர் முதலியவை இப்பகுப்பில் அடங்கும்.

இருந்தால் (inessential) நல்லது எனும் பொருள்கள் சில உள்ளன. குளிர்பதன அறை, தொலைக்காட்சிப்பெட்டி முதலியன இப்பகுப்பில் அடங்கும். இவை காலப்போக்கில், இருந்தால் நல்லது எனும் பகுப்பில் உள்ள இப்பொருள்கள், இருந்தால்தான் நல்லது எனும் பகுப்பிற்கு முன்னேறி விடுவதும் உண்டு.

ஆனால், இக்காலகட்டத்தில் வாழ்க்கைக்கு ஆதாரமான அறநூல்கள் இருந்தேயாக வேண்டும் என்ற பகுப்பிலிருந்து இருந்தால் நல்லது என்ற பகுப்பிற்கு தள்ளப்பட்டுள்ளது என்பதே வருந்தத்தக்கது.

மனிதனின் துன்பத்திற்குக் காரணம், அவன் செய்யக் கூடியவற்றை செய்யாதிருப்பதும்; செய்யக்கூடாதவற்றைச் செய்வதும்தான். அதற்குக் காரணம் மனித இனம் செய்யக் கூடியவை; செய்யக் கூடாதவை பற்றிய நியாயங்களின் கையேடாக இருக்கும் அறநூல்களைக் கல்லாதொழிவதால்தான்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானுங் கெடும்** எனும் தலைப்பின்கீழ் வரும் குறளே அகச்சான்று.

அறநூல்களில் நமக்கு, வாழ்வின் தரிசனம், மக்களின் தரிசனம், சமூகத்தின் தரிசனம், உலகத்தின் தரிசனம் ஆகிய தரிசனங்கள் கிட்டுகின்றன.

வாழ்க்கை ஒரு பாலைவனம் என்றால், அதில் கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருக்களாக அறநூல்கள் இருக்கின்றன. இவை வாழ்க்கையின் உண்மையைத் தேடுகிற முயற்சியில் பங்குகொண்டு, அதை மேம்படுத்தும் முயற்சியில் ஓயாமல் ஈடுபடுகிறது; உள்ளத்தின் பரப்பளவை விரிவாக்குகிறது; ஆழத்தை மேலும் ஆழமாக்குகிறது.

மனித மனம் விசாலம் அடைவதற்கு உரிய கருவியாக அறநூல்கள் ஓயாமல் உழைக்கிறது. தணிக்கை செய்யப்படாத வாழ்க்கையை, இலக்கியம், தணிக்கை செய்து வெளியிடுகிறது.

மக்களிடையே உள்ள பேதங்களை அறநூல்கள் விசாரணை செய்கிறது. விசாரித்து வேற்றுமைக் கூறுகளைப் புறக்கணித்து ஒற்றுமைக் கூறுகளை வலுப்படுத்தும் உத்திகளை அது கற்றுக்கொடுக்கிறது.

ஓடத் தெரியாத மான்கள் இல்லை. நீந்தத் தெரியாத மீன்கள் இல்லை. கூவத்தெரியாத குயில்கள் இல்லை. ஆனால், வாழத்தெரியாத மனிதர்கள் இங்கு நிறைய இருக்கிறார்கள். இந்த வாழத் தெரியாத மனிதக் கூட்டத்தை, வாழ்விக்க வந்தவையே அத்துனை அறநூல்களும்!

அறம் இதுவென்றும், மறம் இதுவென்றும் மக்கள் அறிய இயலாதபோது, திருவள்ளுவர் அருளியுள்ள திருக்குறளைத் திறந்து பாருங்கள். அதில் விடையிருக்கும்.

பாட்டும் உரையும் பயிலாத செவிகள் ஓட்டைச் செவிகள் என்று அறநூல்கள் நுழையாத செவிகளை நிந்தித்தார் ஔவைத்தாய்!

**“பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசையில்லையடா!”** என்று கவியால் அறநூல்களை அருமையை வியந்தார் பாரதி களைத்துக் கிடக்கும் இதயத்தின் மீது மகரந்தத் தேன் பொடியைத் தூவுகிறது அறநூல்கள். வழி தெரியாத வாழ்க்கை நெருக்கடியில் விழி பிதுங்கும் நிலை நிகழ்கையில், என் கைகளைப் பிடி. நான் அழைத்துச் செல்கிறேன் என்று வலிய வந்து அழைத்துச் செல்லும் வழித்தணை ஆகிறது அறநூல்கள்.

மனைவியோடு வாக்குவாதம் முற்றியது; இருவருக்கும் தணியாக் கோபம்; அணையாக் கொதிப்பு; இவளோடு வாழ்க்கை வாழ்வதைவிட, கடல் அலைகளில் மடிவது மேல் என்று கடற்கரை நோக்கி விரைகிறார் சென்னைவாசி ஒருவர்.

வழியில் திருக்குறள் மாநாட்டில் பேச்சாளர் பேச்சு அவர் செவியில் நுழைகிறது! நின்றார்; செவி கொடுத்தார்; பேச்சாளர் பேசுகிறார்.

ஒவ்வொருவர் நெஞ்சிலும் அருந்தனம்போல் பொதிந்து வைத்துக் கொள்ளத்தக்க பெருந்தனம் இந்தக் குறள்:

“குணம்நாடி குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்”

"To err is human" – தவறுவது மனித இயல்பாகும். சிலரிடம் குற்றம் மிகுதியாக இருக்கும்; சிலரிடம் குணம் மிகுதியாக இருக்கும். குற்றம் நிறைந்து குணம் குறைந்து இருப்பார் எல்லாம் வெறுக்கத் – தக்கோர் அல்லர்.

சத்துவம், இராசதம், தாமசம் ஆகிய முக்குணங்களும் தினந்தோறும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். அச்சமயங்களில், நல்லார் இடத்திலும் பொல்லாச்சொல் வர நேரும். அது ராசத குணம். முக்குணச் சுழற்சியில் வந்த காலம் அது என அறிய வேண்டும்.

இராசத குணத்தால் வெறுப்பான செயல் கேட்டபோதே ஒறுக்கத் தொடங்கிவிடாதே! "நெல்லுக்கு உமியுண்டு; நீர்க்கும் நுறையுண்டு" இப்போது வன்சொல் பேசியவர் வாயில், முன்பு பேசிய இன்சொற்கள் எத்தனை என்று நினைவு கூர்க. இன்று பேசிய வன்சொல் ஒன்றினால், முன்பு பேசிய இன்சொற்கள் அத்துனையும் மறந்துவிடாதே நினை - ஆறுவது சினம்!" என்று முடித்தார் மாநாட்டுப் பேச்சாளர்.

**"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்று நன்றுஉள்ளக் கெடும்"** என கடல் அலை நோக்கிச் சென்றவர் மன அலைகளால் தாக்கப்பட்டார்.

ஆம்! என் துணைவி எத்தனை இன்சொற்களை, எத்தனை நாட்கள், எத்தனை மாதங்கள், எத்தனை வருடங்களாக அன்பாய் கொட்டி என்னை மகிழ்வித்திருப்பாள்! ஒரு நாள் பூசல், அவள் புரிந்த அத்துனை உத்தமத்தையும் மொத்தமாய்ப் புறக்கணித்து மறக்கடித்து விட்டதே! எப்படி வருந்துகிறாளோ என்று விடுவிடென்று வீடு நோக்கி விரைந்தார்.

சுக்கலாக நொருங்கிப்போக இருந்த குடும்பம், ஒரு குறளால் மீண்டும் உன்னதப் பாதையில் அடி வைத்தது. இப்படி இலக்கியங்கள் எத்தனை யெத்தனை மனங்களில் ஆபத்தில் அன்பு பாலமிட்டு இணைத்துள்ளனவோ ஆர் அறிவார்?

இவ்வண்ணம் அறநூல்கள் மன்பதைக்கு[1] செய்து முடித்த, செய்து கொண்டிருக்கிற நன்மைகள் அளக்க இயலாதவை விளக்க முடியாதவை!

பொருள் புரியாத சொற்கள் வரும்போது, நாம் அகராதியைப் புரட்டுகிறோம். அதுபோல, எது செய்வது என்று தெரியாத இருள், குழப்பம், மயக்கம் எய்தும்போது, நம் அறநூல்களை ஆலோசனைக்கு அழைக்கலாம்.

பணியாளைத் திட்டி உதைத்துவிட்டு, பிறகு வருந்திய அன்பர் ஒருவர் கம்பன் காதையை எடுத்து விரித்தார்.

---

1 மன்பதை - மனிதகுலம்

*சுக்ரீவனுக்கு இராமன் நீதி சொல்லும் பக்கம் விரிந்தது. அது சொல்கிறது; "சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன யார்க்கும் செய்யேல்" "கூனி சிறியவள் என்று இகழ்ந்து இளமையில் நான் எறிந்த மண் உருண்டை எனக்குரிய மண் உலகையே பிடுங்கிக்கொண்டு என்னை எந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கிறது பார்த்தாயா? நாடிழந்தேன்; நகரிழந்தேன்; தாய் இழந்தேன்; தந்தை இழந்தேன் காரணம் நான் கூனியை இகழ்ந்தேன்!"*

*"சுக்ரீவா! எளியோர்பால் இரக்கம் காட்டு, வன்மம் காட்டாதே!" "ஒரு சான்றோன் தன்பெருந்தன்மையை, தன்னைவிடச் சிறியோரை நடத்தும் முறை கொண்டு வெளிப்படுத்துகிறான்!"*

*பணியாளரைத் திட்டி உதைத்த அவர் விரித்த புத்தகப் பக்கங்கள் மூடப்பட்டன. அவர் மனத்தில் இரக்கத்தின் ஊற்றுக் கண்கள் திறக்கப்பட்டன. "இனிமேல், என் வாழ்க்கையில் எளியோரை வருத்தேன்!" என்ற முடிவை அவர் எடுத்தார்!*

*கோலும் பிரம்பும் இன்றி, கோபமும் திட்டும் இன்றி, காசும் கட்டணமும் இன்றி, நமக்குக் கல்வியும் ஒழுக்கமும் புகட்டும் கருணை முகத்து ஆசான்கள் அறநூல்கள்.*

*இந்த மானுடம் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகளை, ஒழுக்க நெறிகளை, கலைகளை, கருணைப் பெருக்கை, காலந்தோறும் அன்போடும் அருளோடும் பண்போடும் பாசத்தோடும்,*

*அறிவுறுத்தியும் அச்சுறுத்தியும் அழவைத்தும் தொழ முனைந்தும், மகிழ வைத்தும், மலர வைத்தும், ஓயாமல் உலையாமல் மானுடத்தின் காதுகளில் போட்டுக் கொண்டேயிருக்கிறது இலக்கியம்.*

*எப்படி இகழ்ந்தாலும் எவ்வழியிற் புறக்கணித்தாலும் அறநூல்கள் தன் புனிதப் பணியை நிறுத்திக்கொள்ளாது. ஏனென்றால், அறநூல்கள் பிறந்ததன் நோக்கமே இந்த மானுடத்தை பண்படுத்தத்தான். எனவே மானுடம், பண்படவேண்டுமென்றால், நமக்கு பண்பட்ட அறநூல்கள் இருந்தாக வேண்டும்.*

*ஏன் வேண்டும் அறநூல்கள்? என்று பலரால் வினாவப்படும் வினாவிற்கு விடை இதுதான். இந்த மண்ணுலகில் மானுடம் வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும். எனவே அதற்கு அறநூல்கள் வாழ்ந்தாக வேண்டும்.*

திருந்தும் என்உள்ளம் திருக்கோயில்
ஞான சித்திபுரம் என்று சத்தியம் கண்டேன் – திருஅருட்பா

திருச்சிற்றம்பலம்

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | - ரூ.2,000/- |
| காலை அன்னதானதிற்கு | - ரூ.2,500/- |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | - ரூ.8,500/- |
| மதிய அன்னதானதிற்கு | - ரூ.5,000/- |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | - ரூ.7,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | - ரூ.15,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) -15லி | - ரூ.1,900/- |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through: HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

*அருள்திரு* **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - *606 604.*

*செல்:* +91 9443489849, +91 9942776351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா
ரூ.120

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/- தொடர்புக்கு: 8012680865

www.vallalarmission.org
vallalartrust@gmail.com
www.facebook.com/vallalarmission
Vallalarmission. Cell no: +91 99427 76351





# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: +91 91235 38685, +91 94874 54688**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly August 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# வடலூர் மாதப்பூசம்



**28.08.2019** – ஆவணி 11 – புதன்

**24.09.2019** – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை

**05.10.2019** – புரட்டாசி 18 – சனிக்கிழமை
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரை இப்புவியில் வருவிக்கவுற்ற திருநாள்

**21.10.2019** – ஐப்பசி 04 – திங்கட்கிழமை

**24.10.2019** – ஐப்பசி 07 – வியாழக்கிழமை
வள்ளல் பெருமானார் சன்மார்க்கக் கொடி கட்டிய திருநாள்

**18.11.2019** – கார்த்திகை 02 – திங்கட்கிழமை

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

*அனைவரும் வருக! குருவருள் பெறுக!!*

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**